# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வேலையாட்கள் நட்டஈடு (திருத்தச்) சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, ஏப்பிறல் மாதம் 21 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 4.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2005 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க, வேலையாட்கள் நட்டஈடு (திருத்தச்) சட்டம்

[2005 ஆம் ஆண்டு, ஏப்பிறல் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.- ஓ. 26/2004

### வேலையாட்கள் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, வேலையாட்கள் நட்டஈடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (139 ஆம் அத்தியாயமான) வேலையாட்கள் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "மூன்று நாள் கொண்டதான ஒரு காத்திருத்தற் காலப்பகுதி முடிவடைந்த" என்னும் சொற்களை விட்டுவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*139 ஆம் அத்தியாயத்தின் 6 என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) அதன் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில் "கூட்டுமொத்தமக ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டுமொத்தமாக பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ii) அதன் (2) ஆம் உட்பிரிவில் "நூறு ரூபாவுக்குக் குறையாததும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரம் ரூபாவுக்குக் குறையாததும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள (i) ஆம், (ii) ஆம், (iii) ஆம் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(i) நட்டஈடு இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத விடத்து, பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றினையும் ;

(ii) நட்டஈடு மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாதவிடத்து, பதினையாயிரம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றினையும் ;

(iii) நட்டஈடு ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவிடத்து, இருபதாயிரம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றினையும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் அட்டவணை IV என்பதனை மாற்றீடு செய்தல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை IV இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணை இடப்படுகின்றது.

அட்டவணை IV

(பிரிவு 6)

**குறித்தசில விடயங்களில் செலுத்தப்படற்பாலதான நட்டவீட்டுத் தொகை**

| (1) ஊறுற்ற வேலையாளின் மாதச் சம்பளம் | (2) வேலையாளின் இறப்பு | (3) வேலையாளின் நிரந்தர முழுமையான இயலாமைக்கு | (4) வேலையாளின் தற்காலிக இயலாமைக்கு அரைமாத நட்டவீடு |
|---|---|---|---|
| ரூ. ரூ. | ரூ. சத | ரூ. சத | ரூ. சத |
| 0 _ 2,500 | 1,816,65.00 | 1,96,083.80 | 1,320.00 |
| 2,501 _ 5,000 | 2,58,640.80 | 2,95,075.00 | 1,804.00 |
| 5,001 _ 7,500 | 3,30,968.00 | 3,51,461.00 | 2,186.80 |
| 7,501 _ 10,000 | 4,07,427.90 | 4,44,494.60 | 2,733.50 |
| 10,001 _ 12,500 | 4,78,495.60 | 5,19,593.80 | 3,231.80 |
| 12,501 _ 15,000 | 5,22,495.60 | 5,50,000.00 | 3,561.80 |
| 15,001 _ 17,500 | 5,49,631.50 | 5,50,000.00 | 3,890.70 |
| 17,501 _ 20,000 | 5,50,000.00 | 5,50,000.00 | 4,221.80 |
| 20,001 _ அத்துடன் அதற்குமேல் | 5,50,000.00 | 5,50,000.00 | 5,500.00 |

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்